1971 டிசம்பர் 16]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு முழுமையான பணியை தமிழக அரசு மேற்கொண்டிருக்கும் வேளையில், இந்தக் குழுவினுடைய முழுமையான 'தமிழக வரலாற்றினை' முதலில் தமிழில் தொகுத்து, பின்னர் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அளித்து மேலைநாடுகளிலும், கீழைநாடுகளிலும் தமிழகத்தின் வரலாற்றைத் திரித்துச் சொல்லப்படும் நிலைமையும்--என்சைக்ளோபீடியாக்களிலும் மாற்றி எழுதப்படும் நிலையையும் விரைவில் போக்க முற்படுவார்களா? இந்த வரலாறு எழுதுவதற்கு காலவரையறை ஏதாவது வரையறுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுவிற்கு இரண்டாண்டுக் காலம் என்று காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலில் தமிழில் உருவாக்கி வெளிவந்தபிறகு, ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது பற்றி பின்னர் யோசிக்கலாம்.

உள்ளூர் நூலக ஆணைக்குழு.

* **451 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உள்ளூர் நூலக அதிகாரக்குழு இணை மானியம் எதுவும் பெறுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின் 13 (3)-வது பிரிவிற்கிணங்க, சென்னை உள்ளூர் நூலக அதிகாரக் குழு இணை மான்யம் பெறுந் தகுதி வாய்ந்ததல்ல.

குண்டாக்கல்பட்டி-மேலடைமாணிக்கபுரம் சாலை

* **452 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்டவைகளுக்கு விடையளிப்பாரா—

(அ) குண்டாக்கல்பட்டியிலிருந்து மேலடைமாணிக்கபுரம் செல்லும் சாலைபோக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் இல்லை என்பது உண்மையா?

(இ) இதை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இச்சாலையை செப்பனிடும் செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் இல்லை.